**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்** — தலைவர்
**R.சந்திரசேகரன்.** — பொதுச்செயலாளர்
**E.சித்தையன்** — நிதிச்செயலாளர்

**சுற்றறிக்கை / 07-2018** **10-05-2018**

அன்புடையீர்,

வணக்கம் மத்திய மாநில அரசு ஊழியர்களுக்கு 7வது ஊதியக்குழு பரிந்துரைப்படி 01.01.2016 முதல் வழங்கப்பட்ட ஊதிய உயர்வைப்போலவே, தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் சுமார் 80,000 பேர் மகிழும் வண்ணம் 01.12.2015 முதல் 2.57 மடங்கு ஊதிய உயர்வு வழங்கி! வீட்டு வாடகை, நகர ஈட்டுப்படி மற்றும் இதரப் படிகளை கணிசமாக உயர்த்தி! ஏராளமான பதவி உயர்வுகளை வழங்கி! ஒப்பந்தத் தொழிலாளர்களின் தின ஊதியத்தை ரூ.380/- ஆக உயர்த்தி! பகுதி நேரப் பணியாளர்களுக்கும் 2.57 மடங்கு ஊதிய உயர்வுடன் காலமுறை ஊதியத்தை மாற்றியமைத்து! வைரவிழா ஆண்டுயர்வினை வழங்கி! வாரத்தின் 4-வது சனிக்கிழமை விடுமுறையாக அறிவித்து! இன்னும் பிற சலுகைகளுடன் ஊதிய உயர்வு வழங்கிய மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்களுக்கும் ஊதிய உயர்வுக்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்தித்தந்த மாண்புமிகு **மின்துறை அமைச்சர் P. தங்கமணி** அவர்களுக்கும் 14-மின்சார தொழிற்சங்கங்களின் சார்பில் நன்றி தெரிவிக்கும் விழா 25-04-2018 அன்று மாலை சென்னை எழும்பூரில் உள்ள ஓட்டல் அம்பாசிடர் பல்லவாவில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

ஒப்பந்தத்தில் உறுதியளித்தபடி அதிகவருவாய் ஈட்டும் 156 துணைக்கோட்டங்கள் அடையாளம் காணப்பட்டு அவைகளுக்கு கணக்கீட்டு அலுவலர் பொறுப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது. (வாரிய உத்தரவு எண்: 11 – நாள்: 03-05-2018).

1. புதிய ஊதிய விகிதத்தில் பொருத்தும் போது இறுதி கட்டத்தை தாண்டியவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 3 சதவீதம் ஊதிய உயர்வு வழங்கவேண்டுமென்றும்.

2. 1-7-2007ல் பயிற்சியாளர்களாக இருந்தவர்களுக்கு பயிற்சி காலம் முடிந்தவுடன் வைரவிழா ஆண்டுயர்வு வழங்கவேண்டுமென்றும்.

3. 1-7-2017ல் பணியில் இருந்தவர்கள் புதிய ஊதியத்திற்கு வர 1-7-2017க்கு பிறகு அதாவது 1-1-2018 ல் விருப்பம் தெரிவித்திருந்தால் அவர்களுக்கும் விருப்பம் தெரிவித்த நாள் முதல் வைரவிழா ஆண்டுயர்வு வழங்கவேண்டுமென்றும்.

4. 1-7-2017ல் சம்பளமில்லா விடுப்பில் இருப்பவர்கள், தண்டனைக்காலத்தில் இருப்பவர்கள் மற்றும் தற்காலிக பணிநீக்கத்தில் இருப்பவர்கள் ஆகியோருக்கு விடுப்பு முடிந்து பணியில் சேர்ந்தபிறகு, தண்டனைக்காலம் முடிந்தபிறகு மற்றும் தற்காலிக பணிநீக்கம் விலக்கப்பட்டு பணியில் சேர்ந்தநாளில் இருந்து வைரவிழா ஆண்டுயர்வு வழங்கவேண்டுமென்றும்.

5. 1-12-2015க்கு பிறகு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் ஊதிய உயர்வு திருத்தப்பட்டு சம்பள/பிழைப்பூதிய நிலுவைத்தொகையினை வழங்கிட வேண்டுமென்றும்.

6. பகுதிநேர பணியாளர்களுக்கும் 2.57 மடங்கு ஊதிய உயர்வும் 1-7-2017ல் பணியில் இருப்பவர்களுக்கு வைரவிழா ஆண்டுயர்வு வழங்கவேண்டுமென்றும்.

7. 1-12-2015 முதல் 30-06-2017 வரை இறந்துவிட்டவர்களுக்கும் வைரவிழாஆண்டுயர்வு வழங்கப்பட்டதாக கருதி 1-10-2017 முதல் குடும்ப ஓய்வூதிய பணப்பலன்வழங்கிடவேண்டுமென்றும். வாரியம் 8-5-2018ல் விளக்கம் அளித்துள்ளது.

தொழிற்சங்கங்களின் வேண்டுகோளினை ஏற்று 2007, 2008 மற்றும் 2009ல் கணக்கீட்டாய்வாளர்களாக நியமனம் செய்யப்பட்ட 1695 பேருக்கு, அவர்கள் ஒப்பந்தத்

தொழிலாளர்களாக பணியில் அமர்த்தப்பட்ட நாளினை அடிப்படையாகக் கொண்டு பொது முதன்மை CE/Pயின் 08-05-2018 கடிதத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

எந்தவித சிரமத்திற்கும் ஆட்படாமல் சங்கத்தின் சாதுரியமான நடவடிக்கையால் கணிசமான ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத்தொகையினை பெற்றிட்ட சங்க உறுப்பினர்கள் பெருமகிழ்சி அடைந்திருப்பதை கண்கூடாக காண்கிறோம். தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளும் விதமாக சங்கத்திற்கு நன்கொடையினை கணிசமாக வழங்கிவருகிறார்கள். கடந்த 6-5-2018 அன்று வேலூரில் நடைபெற்ற வட்டச் செயலாளர் திரு. நாராயணன் அவர்களின் பணிஓய்வு (30-4-2018) பாராட்டுவிழாவில் கலந்துகொண்ட சங்கத்தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் நிதிச்செயலாளரிடம் வேலூர் வட்டக்குழுவின் சார்பில் **ரூ. 3,32,595/-** ஊதிய உயர்வு நன்கொடையாக மத்திய சங்கத்திற்கு வழங்கினார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இத்தொகையில் ஒருமாத பணப்பலன், திரு.எஸ்.நாராயணன், க.மே ரூ.11,000/- திரு.கே.குமார்,ஆ.மு. ரூ.13,728/-, திரு.எம்.மகேந்திரன், ஆ.மு. ரூ.13,728- திரு.ஜு. அருள்முருகன், க.மே ரூ.12,500/- திருமதி.என். பர்வதவர்த்தினி, க.மே. ரூ.12,000/-திரு. கே. கிருஷ்ணன், க.மே ரூ.10,000/- திரு. ஈ.முருகன், வ.ஆ. ரூ.10,000/- திரு.எம். கலைவாணன், ஆ.மு. ரூ.10,000/- திரு.டி. ஆபிரகாம், ATO. ரூ.10,000/- திரு.என். துரை முருகன், வ.ஆ. ரூ.9,000/- திரு.என். சரவணன்,Assr ரூ.6,000/- திருமதி.ஆர். கீதா,Assr-II ரூ.5,000/- ஆகியவை அடங்கும். இத்துடன் முதல் தவணையாக **352** பேரின் 2018ம் ஆண்டிற்கான சந்தாதொகை செலுத்தப்பட்டது.

இது தவிர திரு. B. வைத்தியலிங்கம், கோட்டச் செயலாளர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்கள் 09-05-2018 அன்று ரூ.10,941/- நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இதுவரையில் கீழ்கண்ட விவரப்படி ஊதிய உயர்வு நன்கொடை **ரூ. 5,54,157** பெறப்பட்டுள்ளது.

1. வேலூர் ரூ. 3,33,595/- 2. மேட்டூர் ரூ.50,000/- 3. தருமபுரி ரூ. 31,650/-
4. விருதுநகர் ரூ.26,691/- 5. த.அ.கிளை ரூ.23,764/- 6. கன்னியாகுமரிரூ.23,700/-
7. உடுமலை ரூ. 20,000/- 8. நாமக்கல் ரூ.14,000/- 9. சென்னை/ம ரூ.5,750/-
10. சேலம் ரூ. 5,000/- 11. பெரம்பலூர் ரூ. 4,750/- 12. திருச்சி/ மெ ரூ.4,750/-
13. விழுப்புரம் ரூ. 4,407/- 14. சென்னை/ வ ரூ.3,000/- 15. கோவை/வ ரூ. 2,000/-
16.சென்னை/தெ ரூ.1,000/- 17. நெல்லை ரூ. 500/-

சங்கத்தின் கிளை மற்றும் வட்டத்தேர்தல்கள் அனைத்தும் நடைபெற்றுள்ளன. மூன்றாவது கட்டமான மண்டலச் செயலாளர்கள் தேர்தல் வேலூர், கோவை, திருச்சி, ஈரோடு, நெல்லை, மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் நடைபெற்றுள்ளன. மீதமுள்ள விழுப்புரம், சென்னை வடக்கு, தெற்கு, ஆகிய மூன்று மண்டலங்களுக்கான தேர்தல்கள் 27-5-2018க்குள் நடத்தி 31-5-2018க்குள் அறிக்கையினை மத்தியசங்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

<u>பெறுநர்:</u>

கிளைச் செயலாளர்கள், கோட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், வட்டத்தலைவர்கள், மண்டலச் செயலாளர்கள், மத்திய சங்கப் பொறுப்பாளர்கள்.